# விடுதலைப் புலிகளின் ''ராக்கிங்'' வர்ணனையும்

# மாணவர்களின் நிலைப்பாடும்

பல்கலைக்கழக வரலாற்றில் உலகளாவிய ரீதியில் ''ராக்கிங்'' என்பதுநடைபெற்றுவருகிறது என்பதை தமிழ்பேசும் மக்கள் நன்கு அறிவர். இந்தவகையில் எமது பல்கலைக்கழகத்திலும் ''ராக்கிங்'' நடைபெற்றுவருவது உண்மையே.

மரபு ரீதியாக நடைபெற்றுவருவதால் ''ராக்கிங்''கை ஏற்றுக்கொள்ளும்படி உங்களை கேட்கவில்லை; அந்தநோக்கிலே நாம் செய்யவும் இல்லை. உண்மையில் எம்மைப் பொறுத்தவரை ''ராக்கிங்'' என்பது, சக மாணவர்களுடன் பரஸ்பர புரிந்துணர்வுக்காக மேற்கொள்ளப்படுகின்றதே அல்லாமல், அண்மையில் விடுதலை அமைப்பு ஒன்றினால் பத்திரிகையில் வெளியிடப்பட்ட உண்மைக்கு மாறான நடவடிக்கைகளுக்காக (தனிப்பட்ட வக்கிர உணர்வுகளை தீர்த்துக்கொள்வதற்காக) மேற்கொள்ளப்படுவதில்லை என்பதனை உறுதியாக கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

''ராக்கிங்'' என்றதுமே பாலியல் ரீதியான நடவடிக்கை என சின்னத்தனமாக மேற்படி இயக்கம் புரிந்து வைத்திருப்பதன் அடிப்படை எமக்கு விளங்கவில்லை. புதிய மாணவர்கள் வருகை தந்த முதல்நாளே எம்மைப் பற்றிய தவறான கருத்தினை அவர்கள் மனதில் உண்டுபண்ணியதன் மூலம் அவர்களுக்கும் எங்களுக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளியை உண்டுபண்ணியமை எம்மைப் பெரிதும் வேதனையுறச் செய்கிறது. மேலும் பொதுமக்களும் பல்கலைக்கழக மாணவர்களை காம வெறியர்களாகப் பார்க்கத் தொடங்கியிருப்பதை எமது தன்மானத்திற்கு விடப்படும் சவாலாகவே எம்மால் எடுத்துக் கொள்ள முடிகிறது.

''ராக்கிங்'' என்பது முழுக்க முழுக்க பிழையானது என்று எடுத்துக் கொண்டாலும் கூட, சம்பந்தப்பட்ட இயக்கம் அதனை தடைசெய்ய கைக்கொண்ட வழிமுறைகளையும் இதன்காரணமாக எமது சகமாணவர்கள் மூவர் விசாரணைகள் எதுவுமின்றி மூர்க்கத்தனமாக தாக்கப்பட்டதையும் மிகவும் வன்மையாக கண்டிக்கிறோம். மேற்படி இயக்கம் மென்முறையில் பிரச்சனையை அணுகி இருப்பின் எத்தனையோ சிக்கல்களை தவிர்த்திருக்க முடியும். மேலும் மாணவர்களின் கருத்துக்களூடாக இதை அணுகி இருப்பின் எந்தச் சிக்கலும் எழுந்திருக்காது ஏனெனில், ஒரு வெளியாரை விட ''ராக்கிங்'' என்பதன் முழு அர்த்தத்தை ஒரு பல்கலைக்கழக மாணவனாலேயே புரிந்து கொள்ள முடியும்.

தற்போதுள்ள நிலையில் சமூகத்தில் இருந்து மாணவர்களாகிய நாம் பிரிக்கப்பட்டு குற்றவாளிகளாக காட்சியளிக்கிறோம். இந்த நிலையில் எமது உண்மை நிலையை விளக்கி உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை சமூகத்துக்கு எடுத்துக்காட்ட முடியாதபடிக்கு எழுத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் பத்திரிகைச் சுதந்திரம் என்பன பறிக்கப்பட்ட நிலையில் வாயிருந்தும் ஊமைகளாக்கப்பட்டிருக்கிறோம். எமது கருத்துக்களை வெளிப்படையாகச் சொல்ல முடியாது சகோதரன் தந்த சிறைகளுக்குள் சிதைபட்டுக் கொண்டிருக்கிறோம்.

தன்னிச்சையாக தான்தோன்றி தனமாக துப்பாக்கி ரீதியில் தீர்வுகாண்பதென்பது மாணவர்களின் எதிர்ப்புணர்ச்சியை மேலும் சம்பாதிக்க வழிவகுக்குமேயல்லாமல் தீர்வுக்கு வழிவகுக்கப்போவதில்லை. மேலும் இது போன்ற சம்பவங்களால் விடுதலைப் போராட்டம் மாசுபடவே செய்யும்.

**அடக்கு முறைகளின் கூரூரங்களுக்கு எதிராகப் போராடும் நாம், நமக்குள்ளேயே அடக்கு முறைகளைப் பிரயோகிப்பதால் எதிரிகளின் எண்ணிக்கை அதிகரித்து முன்வைத்த குறி முடங்கிப் போய்விடும் சமரசங்கள் என்பது சமாதிக்குப் போய்விடும்.**

**இறுதியாக புத்தகமும், துப்பாக்கியும் இணைந்த போராட்டத்தையே நாம் விரும்புகிறோம். முறையான கல்வி இல்லாமல் துப்பாக்கியாலும் முன்னேற முடியாது. துப்பாக்கி இல்லாமல் கல்வியால் மட்டும் புரட்சி கனியாது!**

**எனவே சரியான கல்வியை செயற்படுத்தும் கருவியாக ஆயுதங்கள் மலர்ந்து அனைத்து ஒடுக்கு முறைகளும் உடைத்தெறியப்பட்டு ஒரு புதிய சமுதாயம் மலரும் என்ற நம்பிக்கையில் நகந்து கொண்டிருக்கும்.**

**முதல் வருட கலைப்பீட மாணவர்கள்**

**யாழ் பல்கலைக்கழகம்**